தலைமைக் கழக அறிவிப்பு

மறுசீரமைப்புக்கான தலைமைக் கழக பிரதிநிதிகள் - மாவட்டச் செயலாளர்களின் உடனடி கவனத்திற்கு!

பவளவிழா கண்டு நூற்றாண்டை நோக்கி நடைபோடும் நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகம் புத்தெழுச்சியைப் பெறஅடுத்தகட்டப் பயணத்தில் வெற்றிகளை அடைய, கழகத்தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களால் அமைக்கப்பட்ட மறுசீரமைப்புக்குழுவானது பல்வேறு பரிந்துரைகளை கழகத்தலைவர் அவர்களிடம் வழங்கியுள்ளது.

மறுசீரமைப்புக் குழு வழங்கிய பரிந்துரைகளின் அடிப்படையிலேயே மாவட்டம் பகுதி - நகரம் - ஒன்றியம் - பேரூர் - வட்டம் கிளைகள் மறுசீரமைக்கப்பட வேண்டும் என 22 ஆகஸ்ட் 2026 அன்று நடைபெற்ற தலைமைச் செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானங்கள் இயற்றப்பட்டுள்ளது.

மாநிலம் முழுவதும் ஒரே அளவிலான பகுதிநகரம்ஒன்றியம்பேரூர் அமைந்திட வேண்டும் என்பது மறுசீரமைப்பின் முக்கியமான இலக்காகும். தற்போது பல்வேறு இடங்களில் பரிந்துரைகளின் அடிப் படையில் இன்றி தன்னிச்சையாக கழக அமைப்புகள் மறுசீரமைக்கப்படுவதாக தலைமைக் கழகத் திற்கு தகவல்கள் வருகின்றன. தலைமைக்கழகத்தில் சரிபார்க்கப்படும் போது பரிந்துரைகளின்படி இல்லாத மறுசீரமைப்புகள் ஏற்றுக்கொள்ளப்படாது.

இயற்றப்பட்ட தீர்மானங்களின்படி, ஒன்றியக்கழகங்கள் சராசரியாக 30,000 வாக்குகளைக் கொண்டதாக அமைத்திட வேண்டும். உதாரணமாக ஒரு வருவாய் ஒன்றியத்தில் 55,000 வாக்கு கள் இருந்து முன்பு மூன்று அல்லது நான்கு கழக ஒன்றியமாக இருந்திருந்தாலும் தற்போதைய செயற்குழு தீர்மானத்தின் அடிப்படையில் சராசரியாக 30,000 வாக்குகள் என்பதை அடிப்படையாக வைத்து இரண்டு கழக ஒன்றியங்களாக மட்டுமே பிரிக்க முடியும். 18,000 வாக்குகள் வீதம் மூன்றாகவோ 14,000 வாக்குகள் வீதம் நான்காகவோ பிரிப்பது கூடாது.

பகுதிக்கழகங்கள் சென்னையில் 40,000 வாக்குகளைக் கொண்டதாகவும், மற்ற மாநகரங்களில் சராசரியாக 30,000 வாக்குகளைக் கொண்டதாகவும் அமைய வேண்டும். நகரக்கழகங்கள் சராசரியாக 40,000 வாக்குகளைக் கொண்டதாகவும் அமைந்திட வேண்டும்.

வட்டக்கழகங்கள் சென்னை மாநகராட்சியில் சராசரியாக 10,000 வாக்குகளைக் கொண்டதாக வும் பிற மாநகராட்சிகளில் சராசரியாக 5000 வாக்குகளைக் கொண்டதாகவும் மறுசீரமைக்கப்பட வேண்டும்.

எனவே, மாவட்டச் செயலாளர்களும், மறுசீரமைப்புக்கான தலைமைக்கழக பிரதிநிதிகளும் மேற்சொன்ன தீர்மானங்களின் அடிப்படையிலேயே மறுசீரமைப்பு செய்யப்படுவதை உறுதி செய்திட வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை 18.
நாள் :12,10.2026.

தலைமைக் கழகம்,
தி.மு.க.

ஒழுங்கு நடவடிக்கை

தலைமைக்கழக அறிவிப்பு

சென்னை கிழக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் துரை.கண்ணன் கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையி லும் செயல்பட்டு வந்ததால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலி கமாக நீக்கி (Suspension) வைக்கப்படுகிறார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை 18.
நாள் :12,10.2026.

துரைமுருகன்
பொதுச்செயலாளர்,
தி.மு.க.

எவ்வளவு வலியுறுத்தியும் கேட்காத பா.ஜ.க. அரசு!

ஒன்றிய உள்துறைச் செயலாளருக்கு உச்சநீதிமன்றம் நோட்டீஸ்!

புதுடெல்லி, அக்.13 - தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமா ருக்கு எதிராக காக்ரோச் ஜனதா கட்சி மற்றும் எதிர்க் கட்சிகள் டெல்லியில் அக்.10 அன்று பெரிய போராட்டத் திற்கு அழைப்பு விடுத்திருந்தன. இதையொட்டி, பாதுகாப்பு காரணங்களுக்காக டெல்லி யில் உள்ள 57 மெட்ரோ ரயில் நிலையங்களை மூட வும், ரயில்களை ரத்து செய் யவும் அதிகாரிகள் திட்ட மிட்டனர். இதை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கை அக்.9 அன்று உச்சநீதி மன்றம் விசாரித்தது.

அப்போது "பொதுமக்க ளுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் மெட்ரோ மற்றும் ரயில் சேவைகளை முழு மையாக மூடக்கூடாது. கட் டுப்படுத்தப்பட்ட முறையில் ரயில்களை இயக்க வேண் டும்" என்று உத்தரவிட்டது.

நீதிமன்றத்தின் இந்த தெளிவான உத்தரவு இருந் தபோதும், அக்.9 இரவு தொடங்கி அக்.10 மாலை வரை டெல்லியில் 45 மெட்ரோ ரயில் நிலையங் களின் நுழைவு மற்றும் வெளியேறும் வாயில்கள் முழுமையாக மூடப்பட்டன. ரயில்களும் தொடர்ந்து ரத்து செய்யப்பட்டன. நீதி மன்ற உத்தரவை அதிகாரி கள் திட்டமிட்டு மீறி விட்டதாக கூறி வழக்கறி ஞர் சைலேந்திர மணி திரி பாதி உச்சநீதிமன்றத்தில் அவமதிப்பு வழக்கை தொடர்ந்தார்.

நீதிமன்ற அவமதிப்பு காரணமாக, ஒன்றிய உள் துறை அமைச்சக செயலாள ரான கோவிந்த் மோகன் ஐஏ எஸ், டெல்லி காவல்துறை ஆணையர் அனுராக் குமார், டெல்லி மெட்ரோ ரயில் கழகத் தலைவர் டி. தாரா ஐ.ஏ.எஸ். என 3 உயர் அதிகாரிகளுக்கு உச்சநீதி மன்றம் நோட்டீஸ் அனுப் பியிருக்கிறது.

நீதிமன்ற அவமதிப்பு நட வடிக்கை ஏன் உங்கள் மீது எடுக்கப்படக் கூடாது என் பதற்கான காரணங்களை விளக்கி நாளை அக்.13 உரிய விளக்க பிரமாண பத் திரத்தையும் நீதிமன்ற உத்த ரவை அமல்படுத்தியதற் கான இணக்க அறிக்கையை யும் தாக்கல் செய்ய வேண் டும் என்று அதிகாரிகளுக்கு உச்சநீதிமன்றம் அதிரடி உத் தரவு பிறப்பித்திருக்கிறது. இந்த உத்தரவு டெல்லி மற்றும் ஒன்றிய அரசுக்கு பின்னடைவாக பார்க்கப் படுகிறது.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

இராயபுரம் ப. பொன்னுரங்கம்
அக்டோபர் 13 (1989)



பள்ளிப் பருவத்திலேயே திராவிட இயக்க கொள்கையினால் ஈர்க்கப்பட்டு கழகத்தில் உறுப்பினராக சேர்ந்தவர்.

இராயபுரம் பகுதிக் கழகச் செயலாளராகவும், கழகத்தின் தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தவர்.

இராயபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக தொடர்ந்து மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பாகப் பணியாற்றியவர்.

இந்தித் திணிப்பை எதிர்த்து நடைபெற்ற அறப்போராட்டம், விலைவாசிய உயர்வு உள்ளிட்ட கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

1986ஆம் ஆண்டு மத்திய அரசின் இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து அரசியல் சட்டப்பிரிவை தீயிட்டு எரித்ததால் சட்டமன்ற உறுப்பினர் பதவியை இழந்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

கழகத்தின் செம்மல் கலைஞரின் செல்வம் நிழலாகத் தொடருவார் நினைவிலே படருவார்!



கழகத்தின் செம்மல்
கலைஞரின் செல்வம்
நிழலாகத் தொடருவார்
நினைவிலே படருவார்!

கழகத்தின் செம்மலே!
கலைஞரின் செல்வமே!
தொழுஞ்செல்வி கொழுநரே!
தூயமனம் கொண்டவரே!
பழகுதற்கு இனியரே!
பண்பாட்டின் இமயமே!
எழுவதற்குப் பலருமே
இருந்த ஓர் ஏணியே!

மழலையில் தோன்றிய
மலர்முகத்துக் கவின்முறுவல்
அழச்செய்து நம்மைவிட்டு
அகலும்வரை ஒளிர்ந்ததே!
கிழக்கெழும் சூரியனின்
கிளரொளி பட்டுப்பட்டு
வழக்கமான முகத்திலே
வளரிளமை வாய்த்தவரே
முழக்கமிட்டு வளர்ந்தவரே
முரசொலி வளர்த்தவரே!

பழக்கமில்லை கழகத்தில்
பதவியாசை படாதவரே!
இழக்கவில்லை ஒன்றுமே
ஈர்ப்பினை விடாதவரே!
குழப்பமிலா நெஞ்சினரே
கொள்கையில் நிறைந்தவரே!
இழுத்துப்போய்ச் சட்டமன்றக்
கூண்டிலே ஏற்றினும்
அழுத்தம்கண்டு அஞ்சாத
அரிமாவாய் நின்றவரே!
புழுத்தவர் செய்திட்ட
புன்செயல் வென்றவரே!
கொழுத்தவர் அதிகாரக்
கொக்கரிப்பை எதிர்த்தவரே!
பழுத்தவர் போலன்று
பதில்களை உதிர்த்தவரே!

பண்ணான பேச்சிலே
பகுத்தறிவாம் எழுத்திலே
விண்ணாக உயர்ந்தவராம்
விழிப்பூட்ட உரைத்தவராம்
அண்ணாவின் பேரன்பை
அதிகமாய்ப் பெற்றவரே!
திண்மையாய் ஆகி அவர்
சிந்தனையில் உயர்ந்தவரே!

வண்டுதும் திருக்குவளை
வளவூரில பிறந்தவரே!
கண்டேத்தும் திருவாரூர்
கவனமாய்ப் படித்தவரே!
தொண்டர்க்குத் தொண்டராய்த்
தோள்தந்த தோழரே!
மண்டுநீர்க் காவிரிபாய்
மண்டிலத்துச் சோழரே!

அண்ணனவர் மாறன்தான்
அரசியல் களமிறங்கும்
எண்ணத்தை அறிந்தபின்
இளங்கோபோல் பதவியெனும்
வண்ணத்தை விரும்பாமல்
வருத்தமின்றி வாழ்ந்தவரே!

எப்போதும் பின்னிருந்தே
இயக்கியவர்;இயங்கியவர்!
உப்புப்போல் உட்கலந்து
உறுசுவை கூட்டியவர்;
தப்பேதும் நடவாமல் .
தடுத்தாண்டு கொண்டவர்;
முப்போதும் கழகமே
மூச்சாக இருந்தவர்!
ஒப்பேதும் இல்லாத
உறுநோய்க்கு மருந்தவர்
செப்பமாய்ப் பேசியவர்
சிறுபுகழ்க்கும் கூசியவர்!
தெப்பம்போல் பலரையும்
கரையிலே சேர்த்தவர்!

பேராசிரியர்
மா.செல்வராசன்

பயன்கருதாச் செல்வம்போல்
பலருமே இருந்திட்டால்
வியந்திடக் கழகந்தான்
வெற்றிமேல் வெற்றிபெறும்
மயக்கந்தான் ஒழிக்கலாம்
மடமையும் அழிக்கலாம்
அயலவர் நுழைந்திடும்
அரசியல் அகற்றலாம்
துயர்பல நீக்கலாம்
தூயதாம் தொண்டாலே
தீயதைப் போக்கலாம்
திராவிடம் காக்கலாம்!

சிற்பமாய்க் கலைஞர் தாம்
செதுக்கியே வடித்திட்ட
கற்பிக்கும் ஏடாகும்
கழகத்தின் பீடாகும்
அற்பரின் அரசியலை
அலசியே காட்டிடும்
பொற்பான முரசொலி;
போர்க்குரல் முழங்கொலி!

முப்பத்தைந்து ஆண்டுகள்
முரசொலி ஆசிரியர்!
எப்பாடு பட்டாலும்
எழுவதற்கு முரசொலி
ஒப்பிலாது உழைத்தவர்!
ஊண்உறக்கம் ஒதுக்கியவர்!
செப்பேடு போலவே
செய்தவர் முரசொலியை!

கல்லூரிப் பருவத்தே
களங்கண்டு மாணவர்
பல்லோரும் இந்தியைப்
படைமறவராய் எதிர்க்கச்
சொல்லாலும் செயலாலும்
தூண்டியே போராட்டம்
வெல்லவே காரணமாய்
விளங்கியோருள் முதல்வராய்ச்
செல்வம்அன்று விளங்கினார்
செய்திகளால் கலக்கினார்!

புல்லுக்கும் உணர்ச்சியூட்டிப்
போராட வைத்தவர்!
கல்லுக்கும் விசையூட்டிக்
களம்பாயச் செய்தவர்!
கொல்லவே செய்து சிறைக்
குகையிலே அடைத்துவிட்டு
மல்லுக்கு வந்த இந்தி
மரண அடி பட்டதனால்
நில்லாமல் ஓடிற்று
நெருங்காமல் போயிற்று!

சிலந்தியெனும் பெயரிலே
தீட்டிய கட்டுரைகள்
அலசித்தான் பார்த்தாலோ
அத்தனையும் ஆராய்ச்சி!
உலகந்தான் ஏற்றிடும்
உயர்வாகப் போற்றிடும்
பலகருத்தால் அரசியல்
பாடத்தை ஊட்டிடும்
புலமைதான் கழகத்தின்
போர்க்குரல் ஆகிடும் !
இலவம்பூ அல்ல.அவர்
எப்போதும் இனிப்பளித்து
நிலவும்பூங் கரும்பாவார்
நெஞ்சத்தில் இரும்பாவார்!

கரிகாலச் சோழனுக்குக்
களங்காட்டிக் கருத்தூட்டி
அரியணை ஏறிட
அருகிருந்து உதவிய
இரும்பிடர்த் தலையார்போல்
இருந்தவர் தளபதிக்கு!
வரும்இடர் உணர்ந்தவர்!
வழிகாட்டி உறைந்தவர்!
பொருவதொரு வீரமெனின்
பொறுப்பதும் வீரமெனக்
கருதவும் வைத்தவர்
காலத்திற் செய்தவர்!

அண்ணா வழியொன்றே
ஆக்கவழி எனக்கலைஞர்
எண்ணினார் ஏகினார்
ஏற்றவர் கோடியாவார்!
திண்ணியோர் இன்றுவரை
திகைக்காமல் மேவுகின்றார்!
நண்ணினார் செல்வம் அந்த
நல்வழியில்பாற்சோறு
உண்டிருந்த காலமுதல்
உறுதியாய் எழுந்தவர்!
கண்ணுக்குக் கண்ணாகக்
கடைசி வரை நடந்தவர்!
மண்ணுலகை விட்டாலும்
மனத்துலகில் எப்போதும்.
நண்பராம் செல்வந்தான்
நன்னிழல் தந்தவர்
விண்மீனாய் விளங்குவார்
வேண்டுமொளி நல்குவார்!



தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் சட்டமன்றத் தொகுதி, ஒட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியம், எப்போதுவென்றான் அணைக்கட்டிலிருந்து கல்லாரின் அணை வரை மூன்று கிலோ மீட்டர் தொலைவிற்கு தரமற்று முறைகேடான நிலையில் நடைபெறும் உபரி நீர் வெளியேறும் கரை அமைக்கும் பணியினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜீ.வி.மார்கண்டேயன் திடீர் ஆய்வு செய்தார். ஒன்றியச் செயலாளர்கள் காசிவிஸ்வநாதன், அன்புராஜன், இம்மானுவேல், எப்போதும்வென்றான் முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் முத்துக்குமார், மாவட்டப் பிரதிநிதிகள் வெள்ளைச்சாமி, சத்தியராஜன், வடக்கு மாவட்ட இளைஞரணி, துணை அமைப்பாளர் ராதாகிருஷ்ணன் உள்ளிட்ட பொது மக்கள் உடன் இருந்தனர்.